முருகப்பெருமான் துணை

**மகான் குலசேகர ஆழ்வார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.01.2022,** சனிக்கிழமை

1. பாரப்பா அரங்கன் வழி வரும்
பழுதில்லா தொண்டர் படைகளை
கூறப்பா அரங்கா எனும் செபம்
குவலயமே சேவையாக மாறும் எனக் கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ கலை திங்கள்
இருநான்கோர் திகதி காரிவாரம்
(பிலவ வருடம் தை மாதம் 9ம் நாள், 22.01.2022 சனிக்கிழமை)
இயம்புவேன் குலசேகர ஆழ்வார் யானும்
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உண்மை நிறைந்ததொண்டர்களை
ஞான தேசிகன் சபை கொண்டு
நாடெங்கிலும் சேவை ஆற்றிவர
4. வருகின்ற அரங்கன் சீடர்களே
வையகத்தின் அரங்கன் புகழை
தருகின்ற அரங்கன் தருமத்தை
தரணிமாற்றும் சக்தியாக இயங்கும்
5. இயங்கும் உயர் மக்களாகும்
இவர்கள் சக்திநிலை கூடிவர
தயங்கா உலகளாவிய சேவை
தக்கபடி செய்துவரும் சீடர்களே
6. சீடர்களே உங்கள் அனைவருக்கும்
செப்பிடுவேன் அரங்கன் தவசக்தி
சுடராகி சூட்சும பலமாகக் கூடி
சுருதிபடி இறை ஆற்றல் தந்துவர
7. வருகவே உங்கள் சொல் செயல்
வல்லமை மிக்க வண்ணம் தருமமாக
பேருலகை நோக்கி இருக்க
பேதமற உங்கள் வளர்ச்சிநிலையோடு
8. நிலைப்பட உலகும் மாற்றம்பெறும்
நிலவுலகம் ஆற்றல்படவே
பிழையற ஞானவான் தலைமை
பிசகின்றி அடைதல் கண்டு
9. கண்டுமே ஞான ஆட்சியெனும்
கந்தப்பெருமான் தலைமையாக
உண்டாகும் பாதுகாப்பு மிக்க
உயர் ஆட்சிஉலகம் அடையும்

10. அடைகின்ற இந்தமகா சேவையை
    ஆறுமுகப் பெருமான் தானும்
    தடையின்றி அரங்க ஞானி
    தவபலத்தை கொண்டு இயக்க
11. இயக்கவே அரங்கன் வழியில்
    இவ்வுலக மக்கள் வந்திணைய
    தயக்கமிலா சடுதி மாற்றம்பெறும்
    தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–